தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம், மானூர் வட்டம்,

திருநெல்வேலி மாவட்டம்.

அறிவிக்கை எண்.02/2025 நாள். 13.10.2025

## அறிவிக்கை

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், மானூர் வட்டத்தில் காலியாக உள்ள ஒரு கிராம உதவியாளர் பணியிடத்தினை நிரப்பிட இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025 நாள்: 14.07.2025- ன் படி 17.07.2025 அன்று தமிழ்முரசு மற்றும் தினகரன் தினசரி தமிழ் நாளிதழ் (நெல்லை பதிப்பகம்) பத்திரிக்கையில் அறிவிக்கை வெளியிடப்பட்டு 16.09.2025 அன்று எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. இந்நேர்வில் அரசு வழிகாட்டுதல்களை பின்பற்றி, தற்போது வயது வரம்பில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**(குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025, நாள்: 14.07.2025 அன்று நாளிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மற்றும் எழுத்து தேர்வு எழுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை)**

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஓதுக்கீடு கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பிற்கு உட்பட்ட நபர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| **விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்.** | 14.10.2025 முதல் |
| **விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்.** | 28.10.2025 மாலை 5.45 மணி வரை |
| **பதவியின் பெயர் :** | கிராம உதவியாளர். |
| **சம்பள விகிதம் :** | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/- |
| **வட்டத்தின் பெயர்:** | மானூர் |
| **காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை** | 01 |
| **நிரப்பப்படவுள்ள கிராமத்தின் பெயர் விவரம்.** | 28.சேதுராயன்புதூர் |

**இனசுழற்சி விபரம்**

| **வ.எண்** | **கிராமத்தின் பெயர்** | **காலிப்பணியிடம் எண்ணிக்கை** | **இனசுழற்சி எண்** | **இன சுழற்சி விபரம்** |
|---|---|---|---|---|
| 1. | 28.சேதுராயன்புதூர் | 01 | 06 | SC Priority (ஆதிதிராவிடர் முன்னுரிமை) |
| மொத்தம் | | 01 | | |

| | | |
|---|---|---|
| **கல்வித்தகுதி** | 1. | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். ( SSLC – Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். |
| | 2. | 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |
| | 3. | தமிழில் எழுத , படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள் | 1. | விண்ணப்பதரார் மானூர் வட்டத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். |
| | 2. | தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும். |
| | 3. | அடிப்படை விதி 10-இன்படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| | 4. | அறிவிக்கை எண்.01/2025 நாள்: 14.07.2025-ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும் |

| | | | |
|---|---|---|---|
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது | 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்) அறிவிக்கை 01/2025 நாள்:14.07.2025-ன்படி 17.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். | |
| | அதிகபட்ச வயது | 32* வயது (இதர பிரிவினர் / பொது பிரிவினர் (OC/GT) | |
| | | 39* வயது -பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்)/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (BC / BC(M ) / MBC & DNC) | |
| | | 42* வயது பட்டியல் வகுப்பினர் / பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்/ஆதரவற்ற விதவை (SC / SC(A) / ST / Destitute Widow) | |
| | | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும் |
| | | முன்னாள் இராணுவத்தினருக்கு | 50 வயது - பொது பிரிவினர் (GT)<br>55 வயது - பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்)<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/<br>பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்)<br>/பழங்குடியினர். (BC / BC(M ) / MBC & DNC) / (SC / SC(A) / ST<br>(*அரசாணை (நிலை)எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை நாள்: 13.09.2021-ன் படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.) |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருநெல்வேலி மாவட்டத்தின் அதிகாரபூர்வமான இணையதளமான https://tirunelveli.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ மானூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். முழுமையாக ஆவணங்களின்றி பெறப்படும் விண்ணப்பங்களும், காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மின்னஞ்சல் வழியாக வரப்பெறும் விண்ணப்பங்கள் எந்த ஒரு காரணத்திற்காகவும், எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் நபர்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது. |
| | தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன் தேர்வு மற்றும் மிதிவண்டி அல்லது இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும். |

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

வருவாய் வட்டாட்சியர்,

வட்டாட்சியர் அலுவலகம்,

எட்டான்குளம் ரோடு,

மானூர் - 627201

திருநெல்வேலி மாவட்டம் – 627201.

13/X/25

வருவாய் வட்டாட்சியர்
மானூர்

3/7 13/10/25

கோட்டாட்சித் தலைவர்
திருநெல்வேலி